உ

கடவுள் துணை.

தென்னிந்தியாறெயில்வே

என்னும்

கர்னுடகப் புகைவண்டியின்சிந்து

——*(*)*——

சுத்தமான பதிப்பு.

நாகப்பட்டணம்,

சுப்பராயமுதலியார்

குமாரர்,

தங்கவேலுமுதலியார்

அவர்களது

தனியாம்பாள்அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது. 1905.

விளம்பரம்.

—————*(*)*—————

இதனால் சகலருக்கும் அறிவிப்பது சென்னைசௌகார்பேட்டை போஸ்டைச்சார்ந்த பெத்துநாய்க்கன் பேட்டை அருணாஜலமுதலிதெருவு 10-வதுநெம்பர் வீட்டில் ஸ்தாபித்திருக்கும் தனியாம்பாள் அச்சுக்கூடத்தில் அநேகவித தமிழ்புத்தகங்களும், நூதனமாக அச்சிட்டபுத்தகங்களும், விலைசகாயமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஸ்ரீபுருஷ லக்ஷணக்குறிசாஸ்திரம்) திரேகத்தி லுள்ள குறிகட்கெல்லாம் பலன்தெரிந்துக் கொள்ளும்படி அச்சிட்டது. இதன்விலை அணா 12.

வன்னியபுராணம் மூலம்வுரை	1 8 0
பட்டணத்தார்பாடல் உரையும் பட்டணத்தார்புலம்பல் உரையும் பத்திரகிரியார்புலம்பல் உரையும் மூன்றும் ஒரேகட்டடம் கலிகோ பயிண்டு	1 2 0

ஜாதகங்கணிக்கும் விபரமும்ஜாதகனுக்கு பலாபலன்களும், பெண்கள்ஜாதகமும், எளிதிலறியும்படி அச்சிட்டிருக்கிற அனுபோகஜாதகரகசியம் கிளேஸ் கடிதம் 0 12 0

நா. சு. தங்கவேலுமுதலியார்.
தனியாம்பாள் விலாசம் பிரஸ்.

உ

கடவுள் துணை.

தென்னிந்தியா றெயில்வே என்னும், கர்னாடகப்புகைவண்டியின்சிந்து.

(*)

தென்னிந்தியா றெயில்பாரடி - பெண்ணேயிது
தெற்கேபோகும்நேரடி

மன்னர்கள் தான் துதிக்கும் மதிருஸ்கருகாக
உன்னிதமாகவே யுகமையாயேர்ப்பட்ட (தெ)

மண்டலத்தோர்புகழும் மதிருஸ்எழும்பூரினில்
கண்டவர்வியப்படைக் கருதிநியமித்த (தெ)

சட்டமுடன்ஸ்டேஷன் பட்டணத்தோர்போற்ற
திட்டமதாகவே கட்டியிருக்கிற (தெ)

கண்ணாடிகதவுகள் கனத்த ஆபீசுகள்
விண்ணாடரும்மெச்ச விதமாகயேர்ப்பட்ட (தெ)

கைக்காட்டிமரங்களும் கனத்த ஆளுகளும்
பைகாண்சினேகர்முதல் பலருமிருக்கிற (தெ)

இஞ்சின்வண்டிமுதல் இணையில்லாவண்டிகள்
அஞ்சுதலில்லாமல் தங்கியிருக்கிற (தெ)

டிக்கட்டுகள்வாங்கி இக்கட்டில்லாமலே
பக்குவமாகவே தக்கபடிபோவோம் (தெ)

சைதாபேட்டை ஸ்டேஷன் சார்ந்தபரங்கிமலை
பயிலாகிறெயில்வண்டி பரர்மீதிலேபோகும் (தெ)

பல்லாவரம்பாரு பக்கத்தில்வண்டலூரு
எல்லார்தங்குங்கூடு வாஞ்சேரியிதுபாரு (தெ)

அங்கமதுயீடேற ஆண்டவனைப்போற்றும்
சிங்கபெருமாள்கோயில் ஸ்டேஷனிதுபாரு (தெ)

தங்கயிளப்பாரி தாகவிடாய்தீர
செங்கற்பட்டுஸ்டேஷன் சிறப்பதாய்நாம்வந்தோம்()

கோர்ட்டுமுதலான தூக்குமரங்களும்
மேட்டிமையாய்ச்செயில் தாட்டியாய்த்தோற்றது ()

பொன்விளைந்தகளத்தூரு புகலரியமதுராந்தம்
தன்மையுள்ள தாசில்தார் நடத்துங்கச்சேரி (தெ)

அச்சரவாக்கமிது அடர்ந்துவரும்றெயில்வண்டி
இச்சையுடன்மாற்றும் இணையில்லாஸ்டேஷனிது()

ஒலக்கூருதாண்டிநாம்ஒயிலான திண்டிவனம்
கலக்கமிலாத்தாலுக்கா கட்டழகிவந்தோம்பார்(தெ)

புதுமையுள்ளசத்திரத்தில் போஜனம்நாம்செய்து
இதமுடன்றெயிலேறி இக்ஷணம்போகலாம் (தெ)
மானிலந்தான்புகழும் மயிலமெனுந்தலத்தில்
கானமயில்மீதேறும் கர்த்தனிருக்கிறார் (தெ)
கண்டுபணிந்தால்கர்மவினைகள்போகும்
வண்டுநிகர்விழியாளே மாங்குயில்மொழியாளே (தெ)
விக்கிரவாண்டி விழுப்புரந்தாண்டி
பக்கத்திலேபண்ருட்டி பண்புள்ளஸ்டேஷனிது ()
நெல்லிக்குப்பமெனும் நேரானவூரிது
அல்லலகற்றுந்திருப் பாதிரிப்புலியூரிது (தெ)
பேடைமயிற்கண்ணளே பிரியாதேசெந்தேனே
கூடலூர்ஸ்டேஷனைக்குறிப்பாகநீபாரு (தெ)
ஆலப்பாக்கமிது அடுத்தபரங்கிபேட்டை
கோலமுள்ளகாயலார் குடிகளிருக்கிறார் (தெ)
பார்தனிலுள்ளோர்கள் பத்தியாய்தான்துதிக்கும்
சீருள்ளசிதம்பரத் தெரிசனஞ்செய்யடி (தெ)
நடராஜர்வீற்றிருக்கும் நலமானசிற்சபையை
மடமயிலேநீயும் மனதினிற்போற்றடி (தெ)
தொல்லைவினைகளைத் துரத்திகருவறுக்கும்
தில்லைமாகாளியின் தெரிசனஞ்செய்யடி (தெ)

கனிவர்க்கங்களுண்டு காசாலட்டுமுண்டு
இனிமைப்பிரசாதங்களிருக்குமிடமுண்டு (தே)
வல்வினையைத்தீர்க்கும்வயித்தீஸ்வரன்கோயில்
எல்லையைவிட்டுமகா வேகமாய்த்தான்போகும் (தே)
மாயவரங்குத்தாலங் வயங்குநரசிங்கபேட்டை
தூயஸ்டேஷன்கள் தாண்டிதுரிதமாகப்போகும் ()
திருவிடைமருதூர் தேன்பொழியுங்கும்பகோணம்
பருவுஞ்செந்தலைப்பேரு வந்தோமிப்போதடி (தே)
பாவவிநாசனம் பகரும்ஐயம்பேட்டை
சோபமதைநீக்குஞ் சொகுசுள்ளதஞ்சாவூர் (தே)
முப்பத்திரண்டும் முதன்மையாய்ச்செய்வித்த
தப்பில்லாபோஜராஜன் தங்கியதஞ்சாவூர் (தே)
சாலியமங்கலம் சார்ந்தஅம்மாம்பேட்டை
நீடாமங்கலமிது நேர்ந்தகொரடச்சேரி (தே)
குளிக்கரைஸ்டேஷனிது குணமுள்ளதிருவாலூர்
களிக்கவேதியாகரைக் கண்டுதெரிசிப்போம் (தே)
இத்தலந்தன்னிலே யினையில்லாதேருகள்
மெத்தவுசித்தமாக மேன்மையாய்த்தோற்றுது (தே)
அப்புரமிருக்கும் அடைவானஸ்டேஷன்களை
தப்பிதமில்லாமல்தண்மையுடன்சொல்வேன் (தே)
கீவளூர்தானிது கிளர்சிக்கில்தானிது
மேவிநாகப்பட்டணம்மேன்மையுடன்வந்தோம் (தே)

திடமுள்ள திருச்சிறுப்பள்ளி ஸ்டேஷனிது
வடமேற்குறெயில்பாதை வந்துகலக்கும்பாரு (தெ)
பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிபட்ட
திட்டமுள்ளசொக்கநாதர் திருமதுரைதலமிது(தெ)
அங்கயற்கண்மீனாட்சி யம்மனிருக்கிற
சங்கைகளில்லாத சன்னிதியிற்கோறு (தெ)
திருப்பரங்குன்றம் திருமாநகரம்
விருப்பமுள்ள கள்ளுகுடி விருதுபட்டிஸ்டேஷன்()
துலுக்கப்பட்டிசாத்தூர் கோவில்பட்டிகுமரிபுரம்
துடர்ந்துவரும்ஸ்டேஷன் துருசாய்போகும்இஞ்சின்
கண்டவர்வியப்படையுங்கடம்பூருஸ்சேஷனிது
அண்டையிலிருக்குமணியாச்சிசத்திரமிது (தெ)
செந்தைகுண்டாதாண்டி சிறப்பானறெயில்வண்டி
விந்தைமிகும்திருநெல் வேலியிதோவந்தோம் (தெ)
எத்தும்திட்டப்பாறை நேத்தியாய்நாம்வந்து
தூத்துக்குடிதுலை தூரமேநாம்வந்தோம் (தெ)
தேசமெங்கும்புகழ் திருவண்ணுமலையில்வாழ்
பாசமுடன்வீர பத்திரனியம்பிய (தென்னிந்தியா)

தென்னிந்தியா றெயில்வே சிந்து

முற்றிற்று.





